# சைதை துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

28, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.
போன்: 2435 8373, 24330095
**Email : manidhanaeyam@gmail.com Website: www.mntfreeias.com**

**தமிழ்நாடு அரசு பணியாளர் (TNPSC) நடத்திய தொகுதி - 1க்கான (Group - 1) 2020 - தேர்வில் துணை கலெக்டர் - 6 (மாணவிகள் 5 - மாணவர் 1), போலீஸ் டி.எஸ்.பி – மாணவிகள் 3, வணிகவரித்துறை உதவி கமிஷனர் - 2 (மாணவி – 1 மாணவர் 1), கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் - மாணவி 1, ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் - மாணவர் 1 என மொத்தம் 13 பேர் பணி ஒதுக்கீடு பெற்று மனிதநேய மாணவ, மாணவியர் சாதனை.**

நாள்: 29.07.2022

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு “மனிதநேய அறக்கட்டளை” தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறது. இந்த அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்படும் சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகத்தில் பயிற்சி பெற்று வெற்றி பெற்ற பல மாணவ – மாணவியர்கள் அரசுப் பணி பெற்றுள்ளனர்.

“மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்” மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த 17 ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐஎப்.எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II, IIA (DC, DSP, DRO, DEO, CTO), SUB-INSPECTOR, A.E (HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL, ELECTRICAL) போன்ற பதவிகளுக்கும் இதுவரை 3612க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பணியாளர் ஆண்டுதோறும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ் மற்றும் பிற மத்திய அரசு பணிகளுக்கான தேர்வினை நடத்தி வருகிறது. முதல்நிலை தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்முக தேர்வு ஆகிய மூன்று நிலைகளை கொண்டது இந்த தேர்வு ஆகும்.

**குரூப்-4 (VAO, Junior Assistant - Security, Non Security, Bill Collector - Grade - 1, Field Sureyor, Draftsman, Typist, Steno-Typist) போன்ற பதவிகளில் இதுவரை 26,000-க்கும் மேற்பட்டவர்கள் 169 சாதி பிரிவுகளில் வெற்றி பெற்று பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர்.**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 66 காலி பணியிடங்களுக்கான குரூப்-I தேர்வுக்கான அறிவிப்பு 2020-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. இணையதளம் மூலம் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க 2020 பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி கடைசி நாளாக நிர்ணயிக்கப்பட்டது.

முதல்நிலைத் தேர்வு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி நடைபெற்றது தமிழ்நாட்டின் மாவட்ட தலைநகரங்களில் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு மையங்களில் தேர்வு நடைபெற்றது. இந்நிலையில் முதல்நிலைத் தேர்வு முடிவு 09.02.2020 அன்று வெளியிடப்பட்டது. இதில் மனிதநேய கட்டணமில்லா பயிற்சி மையத்தில் கல்வி பயின்ற 10 மாணவர்கள் மற்றும் 12 மாணவியர்களும் ஆக மொத்தம் 22 பேர் தேர்ச்சி பெற்றனர்.

முதன்மைத் தேர்வு இந்த ஆண்டு மார்ச் மாதம் 04, 05 மற்றும் 06 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றது. இதன் முடிவு ஜூன் மாதம் 29ம் தேதி வெளியிடப்பட்டது. முதன்மைத் தேர்வில் பங்குபெற்ற மாணவர்களுக்கு மனித நேயத்தில் ஜனவரி 2021 முதல் ஏப்ரல் மாதம் வரை நேரடி வகுப்புகள் மற்றும் மாதிரி தேர்வுகள் தொடர்ந்து நடைபெற்றது. இம்மாணவர்களுக்கு இலவச தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் செய்து தரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் திரு. சைதை துரைசாமி தலைமையிலான மனிதநேய மையத்தில் நேர்முகத் தேர்வை வெற்றிகரமாக எதிர்கொள்வது குறித்து சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் இலவச நேர்முகப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவிகளுக்கும் நேர்முகத் தேர்விற்கு கலந்து கொள்வதற்கு உதவியாக நேர்த்தியான காட்டன் புடவைகள் வழங்கப்பட்டன.

முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் மதிப்பெண்கள் **www.tnpsc.gov.in** என்ற தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் 15.07.2022 அன்று வெளியிடப்பட்டது.

**<u>இது குறித்து மனிதநேய அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் திரு.சைதை துரைசாமி அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:</u>**

தனித் திறமை பெற்ற மாணவர்கள் எங்கு படித்திருந்தாலும் அதனை கருத்தில் கொள்ளாமல் தேடிச்சென்று அவர்களுக்கு வேண்டிய உதவியை மனிதநேய அறக்கட்டளை தொடர்ந்து செய்து வருகின்றது. தகுதியுடைய மாணவர்கள், அவர்களை உருவாக்கிய தாய் தந்தையர் மற்றும் ஆசிரியர் ஆகியோருடைய ஆசியுடன் இந்த மாணவர்கள் பெரும் வெற்றியை பெற்று இருக்கிறார்கள். இவ்வாறு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மனிதநேயம் பல்வேறு வகைகளில் உதவி புரிந்ததை மனநிறைவோடு நினைவுகூர்ந்து, அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நேர்மையான அதிகாரிகளை உருவாக்கும் உன்னத பணியில் மனிதநேயம் தொடர்ந்து கடமையாற்றும் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேவைப்படுவோரின் தேவையறிந்து அவர்களை தேடி சென்று உதவி செய்ய வேண்டும் என்ற மனித நேய அறக்கட்டளையின் உயரிய நோக்கோடு தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களின் தேவையை அறிந்து தேர்வின் மூன்று நிலைகளிலும் எந்த ஒரு நிலையிலும் உதவி தேவைப்படும் மாணவர்கள் மனிதநேயத்தை அணுகினால் அவர்களுக்கு தேவையான பயிற்சியை தனிப்பட்ட கவனத்துடன் மாணவர்களுக்கு அளிக்கின்றது.

மாணவர்களை நேர்முகத் தேர்வுக்கு தயார் செய்யும் பொருட்டு பேராசிரியர்கள் உளவியல் வல்லுநர்கள் தனித்திறன் மேம்பாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற ஐஏஎஸ் ஐபிஎஸ் மற்றும் இதர உயர் பணியில் பணிபுரிந்த அரசு அலுவலர்கள் கொண்ட வல்லுநர் குழு மாணவர்களின் தனிப்பட்ட தேவை அறிந்து மாதிரி நேர்முகத்தேர்வுகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்கி மனித நேயத்தில் மாணவர்களை சிறப்புற பயிற்றுவித்தனர்.

மேலும் மனித நேயத்தின் அடிப்படை கோட்பாடுகள் ஆன தேவைப்படுவோரின் தேவை அறிந்து தேடிப்போய் உதவி செய்தல் மற்றும் நேர்மையான அதிகாரிகளை உருவாக்குதல் போன்ற விழுமங்களை மனதில் கொண்டு சமூக மேம்பாட்டிற்கு தேவையான ஒரு நேர்மையான நிர்வாக கட்டமைப்பை மனிதநேய மாணவர்கள் உருவாக்குவார்கள் என்ற பெரும் நம்பிக்கையை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில், தேர்ச்சி பெற்றவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் குருப் - 1 பதவிகளுக்கான கலந்தாய்வு இன்று சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற்றது. காலிப் பணியிடங்களுக்கான நியமன ஆணைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டன.

| வ. எண் | பணி ஒதுக்கீடு பெற்றவர்களின் விபரம் |
|---|---|
| | **துணை கலெக்டர் (DC)** |
| 1. | சுபலஷ்மி. S |
| 2. | ப்ரியதர்ஷினி. D |
| 3. | அபிநயா. E |
| 4. | ஷீஜா. R |
| 5. | காளீஸ்வரி. S |
| 6. | பிரபு. M |
| | **காவல்துறை துணை கண்காணிப்பாளர் (DSP)** |
| 1. | சரண்யாதேவி. M |
| 2. | சிந்து. C |
| 3. | பவனியா. V |
| | **வணிகவரித்துறை உதவி கமிஷனர் (AC / COMMERIAL TAX)** |
| 1. | அஸ்வினி. S |
| 2. | ஜெயபிரகாஷ். R |
| | **கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் (DRCS)** |
| 1. | லேகா. S |
| | **ஊரக வளர்ச்சிதுறை உதவி இயக்குநர் (AD)** |
| 1. | சரவணன் . P |

>>>>>>>>>>>>>>>>>>>>OOO<<<<<<<<<<<<<<<<<<<<